# பெரியோர் ஓய்வுநாட் பள்ளிப் பாடங்கள்

**இரண்டாம் காலாண்டு, 2017**

# "என் ஆடுகளை மேய்ப்பாயாக": 1,2 பேதுரு


1. பேதுரு என்ற மனிதன் (மார்ச் 25–31) ... 6
2. அழியாத சுதந்தரம் (ஏப்ரல் 1–7) ... 14
3. ராஜரீக ஆசாரியக்கூட்டம்' (ஏப்ரல் 8–14) ... 22
4. சமுதாய உறவுகள் (ஏப்ரல் 15–21) ... 30
5. தேவனுக்காக வாழ்தல் (ஏப்ரல் 22–28) ... 38
6. கிறிஸ்துவுக்காகப் பாடுபடுதல் (ஏப்ரல் 29–மே 5) ... 46
7. பணியாள் தலைமைத்துவம் (மே 6–12) ... 54
8. பேதுருவின் நிருபங்களில் இயேசு (மே 13–19) ... 62
9. நீங்கள் நீங்களாகவே இருங்கள் (மே 20–26) ... 70
10. தீர்க்கதரிசனமும் வேதவாக்கியங்களும் (மே 27–ஜூன் 2) ... 78
11. கள்ளப்போதகர்கள் (ஜூன் 3–9) ... 86
12. கர்த்தருடைய நாள் (ஜூன் 10–16) ... 94
13. பேதுரு நிருபங்களிலுள்ள முக்கியக் கொள்கைகள் (ஜூன் 17–23) ... 102



பாட ஆசிரியர்

**ராபர்ட் கே. மிகெய்வர்**

தமிழாக்கம்

மார்சல் ஐசக்



**தென்கிழக்கு இந்திய ஒன்றியம்**

**செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் திருச்சபை**

**197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர், சென்னை – 600 048**

# ஆடுகளை மேய்த்தல்

இந்தக் காலாண்டில் பேதுரு எழுதிய இரண்டு நிருபங்களையும் படிக்கப்போகிறோம்; இயேசுவின் ஊழியத்தில் முக்கியத் தருணங்களில் எல்லாம் பெரும்பாலும் அவரோடு இருந்தவரின் வார்த்தைகள் அவை. ஆதிகாலக் கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒரு முக்கியத் தலைவராகவும் பேதுரு இருந்தார். அவருடைய நிருபங்களை வாசிப்பது எவ்வளவு முக்கியமானது என்பதை அறிவதற்கு இந்த உண்மைகள் மாத்திரமே போதுமானவை. இக்கட்டான காலக்கட்டங்களைச் சந்தித்துவந்த சபைகளுக்கு இந்த நிருபங்கள் எழுதப் பட்டன என்பது கூடுதல் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. அதாவது, சபைகளுக்கு வெளியே யிருந்து உபத்திரவங்களும், உள்ளேயிருந்து கள்ளப்போதகர்களால் ஆபத்தும் உண்டா யிருந்தன.

இந்தக் கள்ளப்போதகர்களின் போதனைகளில், இயேசுவின் இரண்டாம் வருகை குறித்துச் சந்தேகத்தைப் பரப்புவதும் ஒன்றென்று பேதுரு எச்சரிக்கிறார். "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே?" என்று அவர்கள் கேட்பார்கள். *2பேதுரு 3:4.* இரண்டாயிரம் வருடங்கள் கடந்த நிலையில், இன்றும்கூட இப்படிப்பட்ட கேள்வி எழுப்பப்படுவதைக் காண்கிறோமல்லவா?

கள்ளப்போதகர்கள்பற்றி எச்சரிப்பதுதவிர, சபைகளுக்கு உண்டாயிருந்த உபத்திர வம்பற்றியும் அடிக்கடி அவர் பேசுகிறார். இந்த உபத்திரவம் இயேசுவின் உபத்திரவங் களுக்கு ஒப்பாயிருக்கிறதென்றும், அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்து மரித்தாரென்றும் கூறுகிறார். *1பேதுரு 2:24.* இயேசுவின் இந்த மரணமானது பாவத்தால் உண்டான நித்திய மரணத்திலிருந்து விடுதலையைக் கொண்டு வந்தது; மேலும், அவரை நம்புகிறவர்களுக்கு இங்கேயே, இப்போதே நீதியான ஒரு வாழ்வைப் பெற்றுத்தந்திருக்கிறது. இதுவே நற்செய்தி. *1பேதுரு 2:24.*

இயேசு நம் பாவங்களுக்காக மரித்ததுமட்டுமல்லாமல், பூமிக்குத் திரும்பிவந்து, தேவனுடைய நியாயத்தீர்ப்பை வழங்கப்போகிறாரென்றும் பேதுரு கூறுகிறார். *2பேதுரு 3:10-12.* நியாயத்தீர்ப்பு ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் முக்கிய விளைவுகளை உண்டாக் கும் என்கிற உண்மையையும் வலியுறுத்துகிறார். இயேசு திரும்ப வரும்போது, பாவத்தை முற்றிலுமாக அழிப்பார்; அக்கினியால் பூமியைச் சுத்திகரிப்பார். *2பேதுரு 3:7.* பரலோகத் தில் தேவன் சேர்த்து வைத்திருக்கும் சுதந்தரத்தை கிறிஸ்தவர்கள் அப்போது பெற்றுக் கொள்வார்கள். *1பேதுரு 1:4.*

கிறிஸ்தவர்கள் வாழவேண்டியவிதத்தை அனுபவ ரீதியான வார்த்தைகளில் பேதுரு

கூறுகிறார். எல்லாவற்றுக்கும்மேலாக, கிறிஸ்தவர்கள் ஒருவர்மேல் ஒருவர் அன்புகூர வேண்டுமாம். ‘நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களு மாயிருங்கள்.’ *1பேதுரு 3:8.*

வேதாகமம் முழுவதிலும் சுவிசேஷமே மையச்செய்தி. அதை பேதுருவின் நிருபங் கள் தீவிரமாக அறிவிக்கின்றன. ஆண்டவருடைய இரட்சிக்கும் கிருபை எப்படிப்பட்ட தென்று எல்லாரையும்விட மிக நன்றாகவே அறிந்தவர் பேதுரு. தன் ஆண்டவரை வெளிப் படையாகவும், முட்டாள்தனமாகவும் மறுதலித்து, சபித்து, ‘‘அந்த மனுஷனை அறியேன்’’ என்று சொன்ன அதே பேதுருவிடம்தான் பின்னாளில் ஆண்டவர், ‘‘என் ஆடுகளை மேய்ப்பாயாக’’ என்று கூறினார். யோவான் 21:17. ஆண்டவரின் ஆடுகளை மேய்க்கிற வேலையை இந்த இரண்டு நிருபங்கள்மூலமாகவும் பேதுரு செய்கிறார்.

கிறிஸ்துவை விசுவாசிப்பதால் இரட்சிப்பு கிடைக்கிறது என்கிற மாபெரும் சத்தியம் அந்த மேய்ச்சலில் நிச்சயம் இருக்கவேண்டும்; அவருடைய சகஊழியரான அப்போஸ்தல னாகிய பவுலும் இந்தக் கருத்தை மிகவல்லமையாகப் போதிக்கிறார். இதுதான் தேவ கிருபைபற்றின சத்தியம். வெறும் கொள்கை யாகமட்டும் அல்ல, அந்தக் கிருபையின் நிஜத்தையும் வல்லமையையும் தன் சொந்த அனுபவமாக அறிந்தவர் பேதுரு.

**கிறிஸ்தவர்கள் வாழவேண்டிய விதத்தை அனுபவரீதியான வார்த்தைகளில் பேதுரு கூறுகிறார். எல்லாவற்றுக்கும்மேலாக, கிறிஸ்தவர்கள் ஒருவர்மேல் ஒருவர் அன்புகூரவேண்டுமாம்.**

பேதுருபற்றி தன் வேதாகம விளக்க வுரையில் மார்டின் லூதர் இப்படி எழுது கிறார்: ‘பரிசுத்த பேதுருவின் இந்த நிருபம் புதிய ஏற்பாட்டின் பிரமாண்டமான புத்தகங் களில் ஒன்றாகவும், மெய்யான-தூய்மையான சுவிசேஷமாகவும் இருக்கிறது. பவுலும் மற்ற அனைத்து சுவிசேஷகர்களும் செய்வதைத்தான் பேதுருவும் செய்கிறார். அதாவது, நம் பாவங்களை தம்மேல் சுமந்து, நம்மை இரட்சிக்கும்படிக்கு கிறிஸ்து கொடுக்கப்பட் டார் என்று விசுவாசத்தின் மெய்யான உபதேசத்தை வலியுறுத்திக்கூறுகிறார்.’’ - *Commentary on the Epistles of Peter and Jude (Grand Rapids: Kregel Publications, 1982), pp. 2, 3.*

தம் ஆடுகளை மேய்க்கும்படி பேதுருவிடம் இயேசு கூறினார். நாமும் அவருடைய ஆடுகள்தாம். நாமும் மேய்ச்சலைக் கண்டடைவோம்.

*ராபர்ட் கே. மேக்கெய்வர் நியூசிலாந்தில் வளர்ந்தவர்; அவண்டேல் கல்லூரியில் நீண்டநாட் களாகப்பணியாற்றிவருகிறார். அங்கு வேதாகம ஆசிரியராகவும், தொல்பொருள் ஆராய்ச்சிப் பாட ஆசிரியராகவும் இருக்கிறார். அவர் பல புத்தகங்களை எழுதியிருக்கிறார்; ‘த ஃபோர் ஃபேஸஸ் ஆப் ஜீசஸ்’, ‘பியாண்ட் த டா வின்சி கோட்’ ஆகியவை அவற்றில் அடங்கும்.*

# மனன வசனங்கள்

1 காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில்: ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து: அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார். மத்தேயு 14:30,31.

2 ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள். 1பேதுரு 1:22.

3 நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். 1பேதுரு 2:9.

4 எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும். 1பேதுரு 4:8.

5 கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது. 1பேதுரு 3:12.

6 இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். 1பேதுரு 2:21.

7 அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். 1பேதுரு 5:7.

8 நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். 1பேதுரு 2:24.

9 இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும் பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். 2பேதுரு 1:5–7.

10 அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும், நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். 2பேதுரு 1:19.

11 தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும், அவர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம்பண்ணுகிறார்கள்; எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே. 2பேதுரு 2:19.

12 இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! 2பேதுரு 3:11.

13 நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். 1பேதுரு 2:24.

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெர்ட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)
## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.